

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2025) கோபாலபுரம் இல்லத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (7.8.2025) சி.ஐ.டி. காலனி இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் துணைவியார் திருமதி ராஜாத்தி அம்மாள், நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, தயாநிதி மாறன், ஆ.ராசா ஆகியோர் உடனிருந்தனர்.






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளான நேற்று முன்தினம் (07.08.2025) அலங்கரிக்கப்பட்ட அவரது நினைவிடம்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளில்,

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்த திட்டங்கள், நூல் வெளியீடு!



சென்னை, ஆக. 9 –

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு நாளில் , அவர் நினைவைப் போற்றும் வகையில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்' மற்றும் 'கலைஞர் நிதிநல்கை' திட்டத்தைத் தொடங்கி வைத்து, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 புதிய நூல்களையும் வெளியிட்டார்.

நேற்று முன்தினம் (07.08.2025 ) காலை 9.30 மணி அளவில், சென்னை அண்ணா அறிவாலயம், பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் சிலைகளுக்கு முன்பாக அமைக்கப்பட்ட மேடையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்கள் திட்டங்களைத் தொடங்கி வைத்து, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 புதிய நூ ல்களையும் வெளியிட்டார்.

நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்களுடன், தி.மு.கழக பொதுச் செயலாளர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தி.மு.கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் கலந்து கொண்டனர்.

'கலைஞர் மாணவர் பத்திரிகையாளர்' திட்டத்தின் இலச்சினையை முதலமைச்சர் அவர்கள் வெளியிட, பத்திரிகையாளர் நக்கீரன் கோபால் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

'கலைஞர் நிதி நல்கை' திட்டத்தின் இலச்சினையை முதலமைச்சர் அவர்கள் வெளியிட, திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு அவர்கள் பெற்றுக்கொண்டார்.

முத்தமிழறிஞர் பதிப்பகம் வெளியிட்ட 8 நூல்களையும் முதலமைச்சர் அவர்கள் வெளியிட, தி.மு. கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், கழகத் துணைப் பொதுச்செயலாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, சி.வெ. கணேசன், ஆர்.காந்தி, பி.கே.சேகர்பாபு, முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, தலைமைக் கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ் இளங்கோவன், துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ., தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ் காந்தி உள்ளிட்ட தி.மு.கழக நிர்வாகிகள், தி.மு.கழக மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ஜோயல் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், பேராசிரியர் சுப.வீரபாண்டியன், திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், எழுத்தாளர் இமையம், பத்திரிகையாளர் செந்தில்வேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக, 'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சியின் செய்திப் பிரிவு தலைவர் பத்திரிகையாளர் திருமாவேலன் வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியை பத்திரிகையாளர் சுகுணா திவாகர் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியின் இறுதியாக, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் நிர்வாகி நீரை . மகேந்திரன் நன்றியுரை ஆற்றினார்.

**முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தத் திட்டங்கள்:**

★ 'கலைஞர் மாணவப் பத்திரிகையாளர்' திட்டம்

இதழியல் துறைக்கும் திராவிட இயக்கத்துக்குமான நூற்றாண்டு கால பிணைப்பின் அடிப்படையில், பத்திரிகை மீது ஆர்வம் கொண்டு வரும் இளைஞர்களுக்கு, முரசொலி நாளிதழ், கலைஞர் தொலைக்காட்சி வழியாக பயிற்சி அளித்து, அவர்களை மெருகேற்றும் விதமாக, `கலைஞர் மாணவப் பத்திரிகையாளர்' திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. தேர்வாகும் மாணவர்கள் பயிற்சி காலத்தில் ஊக்கத்தொகையுடன் பயிற்சி பெறுவார்கள்.

★ **'கலைஞர் நிதிநல்கை' திட்டம்**

திராவிட இயக்க இளம் ஆய்வாளர்களைக் கண்ட றிந்து, அவர்களை வளர்த்தெடுத்து ஊக்குவிக்கும் விதமாக, `கலைஞர் நிதிநல்கை' திட்டத்தையும் முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார். ஆண்டுக்கு 15 இளம் ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் தவணை முறையில் நிதிநல்கை வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் ஆய்வுகள் முத்தமிழறிஞர் பதிப்பகம் வழியாக நூலாக்கம் செய்யப்படும்.

★ **முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 புதிய நூல்கள்**

முதலமைச்சர் அவர்கள் இந்தித் திணிப்புக்கு எதிராக எழுதிய 'தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்' கட்டுரைத் தொகுப்பு, தி.மு.க முன்னாள் மேயர், தியாக மறவர் சி.சிட்டிபாபு தொகுத்து 1975 ஆம் ஆண்டு வெளியான 'தி.மு.கழக வரலாறு' நூல், 'மாநில சுயாட்சி முழக்கம்', 'இளைய திராவிடம் எழுகிறது', 'திராவிட இயக்க வரலாறு கேள்வி பதில்', 'இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம் ஏன் ?', 'இந்தியாவுக்கு வழிகாட்டும் திராவிட மாடல்', 'இந்தியாவில் சமூக நீதியும் இட ஒதுக்கீடும்' எனும் தலைப்புகளில் 8 நூல்கள் வெளியிடப்பட்டன.

# இன்னும் நீ உயிர்ப்போடு திகழ்கிறாய்!



புகழப்படுவதற்கோ
இகழப்படுவதற்கோ
உயிர்ப்போடு திகழ வேண்டும்
ஒரு பொருள்!

இறந்த பிறகும்
நீ புகழப்படுகிறாய்
மற்றும்
இகழப்படுகிறாய்!

என்ன பொருள்?

உன்னதப் பொருளாக
இன்னும் நீ
உயிர்ப்போடு திகழ்கிறாய்
என்று பொருள்

இரு இப்படியே!

இறந்த பிறகும்
உனக்கு
இறப்பில்லை உயிர்ப்பே!

கவிப்பேரரசு
**வைரமுத்து**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (7.8.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ்நாடு மின்வாரிய நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான கழக தலைவர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி சிங், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை இணைச் செயலாளர் திருமதி கே.எம். சரயு, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், காவல் துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.